ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ கீதார்த்தசங்கிரகம் ॥

*This document** *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ கீதார்த்தசங்கிரகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

கட்டப் பொருள் விரித்த காசினியில் நான் மறையில்⋆
இட்டப் பொருள் இயம்பும் இன் பொருளைச்சிட்டர் தொழும்⋆
வேதாந்த தேசிகனை மேவுவார்⋆ தங்கள் திருப்
பாதாம்புயம் அடியேன் பற்று (1)

கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனார்⋆
பாதாரவிந்தமலர் பத்தியுடனென் பற்று (2)

‡கருமமும் ஞானமும் கொண்டெழும்⋆ காதலுக்கோர் இலக்கென்று⋆
அரு மறை உச்சியுள்⋆ ஆதரித்தோதும் அரும் பிரமம்⋆
திருமகளோடு வரும்⋆ திருமால் என்று தான் உரைத்தான்⋆
தருமம் உகந்த தனஞ்சயனுக்கு⋆ அவன் சாரதியே (1)

உகவை அடைந்த உறவுடையார்⋆ பொரலுற்ற அந்நாள்⋆
தகவுடன் அன்பு கரை புரளத்⋆ தருமத்தளவில்⋆
மிக உளம் அஞ்சி விழுந்து⋆ அடி சேர்ந்த விசயனுக்கோர்⋆
நகை உடன் உண்மை உரைக்க⋆ அமைந்தனன் நாரணனே (2)

உடலம் அழிந்திடும்⋆ உள் உயிர் ஒன்றழியாதெனைப் போல்⋆
விடுமது பற்று⋆ விடாததடைத்த கிரிசைகளே⋆
கடுக உனக்குயிர் காட்டும் நினைவு⋆ அதனால் உளதாம்⋆
விடு மயல் என்று⋆ விசயனைத் தேற்றினன் வித்தகனே (3)

சங்கம் தவிர்ந்து⋆ சகம் சதிர் பெற்ற தனஞ்சயனே⋆
பொங்கும் குணங்கள் புணர்ப்பனைத்தும்⋆ புக விட்டவற்றுள்⋆

www.prapatti.com

நங்கண் உரைத்த கிரிசை எலாம்⋆ எனவும் நவின்றார்⋆
எங்கும் அறிவர்களே என்று⋆ நாதன் இயம்பினனே (4)

பிறவாமை தந்திடத்⋆ தானே பிறக்கும் பெருமைகளும்⋆
துறவாக் கிரிசைகள்⋆ தூ மதி தன்னால் துலங்குகையும்⋆
இறவா உயிர் நன்னிலை கண்டிடும்⋆ உலகின் நிலையும்⋆
மறை வாழ மாயவன்⋆ நேயனுக்கன்றறிவித்தனனே (5)

கண்டெளி தாம் கருமம்⋆ உயிர் காட்டக் கடுகுதலும்⋆
மண்டி அதன் படியில்⋆ மனம் கொள்ளும் வரிசைகளும்⋆
கண்டறியா உயிரைக்⋆ காணல் உற்ற நினைவுகளும்⋆
வண் துவரேசன் இயம்பினன்⋆ வாசவன் மைந்தனுக்கே (6)

யோக முயற்சியும்⋆ யோகில் சம நிலை நால் வகையும்⋆
யோகின் உபாயமும்⋆ யோகு தன்னால் வரும் பேறுகளும்⋆
யோகுதனில் தன் திறமுடை⋆ யோகுதன் முக்கியமும்⋆
நாகணை யோகி நவின்றனன்⋆ நன் முடி வீரனுக்கே (7)

தான் நின்ற உண்மையைத்⋆ தன் தனி மாயை மறைத்தமையும்⋆
தான் அன்றி மாயைதனைத் தவிர்ப்பான்⋆ விரகற்றமையும்⋆
மேனின்ற பத்தர்கள் நால்வரில்⋆ ஞானி தன் மேன்மைகளும்⋆
தேன் நின்ற செங்கமலான்⋆ தெளிவித்தனன் பார்த்தனுக்கே (8)

ஆராத செல்வமும்⋆ ஆர் உயிர் காணும் அரும் பயனும்⋆
பேராது தன் கழற்கீழ்⋆ அமரும் பெரு வாழ்ச்சிகளும்⋆
சோராதுகந்தவர்⋆ தூ மதி கொள்வதும் செய்வனவும்⋆
தேரா விசயனுக்குத்⋆ திருநாரணன் செப்பினனே (9)

தன் மேன்மையும்⋆ தன் பிறப்பில் தளராத் தனி நிலையும்⋆
பன் மேனி நண்ணினன் பால்⋆ பிரியா அன்பர் ஆசைகளும்⋆
புன் மேனி விண்ணவர் பால்⋆ புரியாத தன் பத்திமையும்⋆
நன் மேனி நாரணன் தான்⋆ நரனுக்கு நவின்றனனே (10)

எல்லையிலாத தன் சீலமாம்⋆ இன்னமுதக் கடலும்⋆
எல்லையிலாத விபூதி எல்லாம்⋆ தனதானமையும்⋆

எல்லை இல் பத்தி தனை எழுவிக்கத்⋆ திரு அருளால்⋆
எல்லை இல் ஈசன் இயம்பினன்⋆ இந்திரன் மைந்தனுக்கே (11)

எல்லாம் தனக்குருவாய் இலங்கும் வகை⋆ தான் உரைத்துச்⋆
சொல்லால் அறிந்தது⋆ சோராமல் கண்டிட வேண்டும் என்ற⋆
வில்லாளனுக்கன்று⋆ மெய்க் கண் கொடுத்திது வேறும் உண்டோ⋆
நல்லார்கள் காண்பர் என்று⋆ நவின்றான் நங்கள் நாயகனே (12)

தன் கழலில் பத்தி தாழாததும்⋆ அதன் காரணமாம்⋆
இன் குண சிந்தையும்⋆ ஈதறியார்க்கவ்வடிமைகளும்⋆
தன் கருமங்கள் அறியாதவர்க்கு⋆ இலகு நிலையும்⋆
தன் கழல் அன்பர்க்கு நல்லவன்⋆ சாற்றினன் பார்த்தனுக்கே (13)

ஊனின் படியும்⋆ உயிரின் பிரிவும் உயிர் பெறுவார்⋆
ஞானம் பெறு வகையும்⋆ ஞானம் ஈன்ற உயிர்ப் பயனும்⋆
ஊன் நின்றதற்கடியும்⋆ உயிர் வேறிடும் உள் விரகும்⋆
தேன் நின்ற பாதன்⋆ தெளிவித்தனன் சிலைப் பார்த்தனுக்கே (14)

முக்குணமே உயிர் முற்றவும் கட்டிட⋆ மூண்டமையும்⋆
முக்குணமே அனைத்தும் வினை கொள்ள⋆ முயன்றமையும்⋆
முக்குண மாயை கடத்தலும்⋆ முக்கதி தந்தளிப்பும்⋆
முக்குணம் அற்ற பிரான்⋆ மொழிந்தான் முடியோன் தனக்கே (15)

மூ எட்டிலும்⋆ அதின் மோகம் அடைந்த உயிர்களிலும்⋆
நா எட்டெழுத்தொடு⋆ நல் வீடு நண்ணின நம் பரிலும்⋆
மேவெட்டு வன் குண விண்ணோர்களிலும்⋆ விசயனுக்குத்⋆
தாவிட்டுலகளந்தான்⋆ தனை வேறென்று சாற்றினனே (16)

ஆணை மறாதவர் தேவர்⋆ அல்லா வழக்கோர் அசுரர்⋆
கோணை மராத குணச்செல்வ⋆ நீ குறிக்கொள் மறையைப்⋆
பேணிய தத்துவமும்⋆ பிணி அற்ற கிரிசைகளும்⋆
காண் இதனால் விசயா என்று⋆ கண்ணன் இயம்பினனே (17)

மறை பொருந்தாதவை⋆ வல் அசுரர்க்கு வகுத்தமையும்⋆
மறை பொருந்தும் நிலையும்⋆ வண் குணப்படி மூ வகையும்⋆



www.prapatti.com

மறை நிலை தன்னை வகுக்கும்⋆ குறி மூன்றின் மேன்மையும்⋆ அம்
மறை உமிழ்ந்தான் உரைத்தான்⋆ வாசவன் தன் சிறுவனுக்கே (18)

சத்துவ வீடுடை நற்கருமம்⋆ தான் உகந்தமையும்⋆
சத்துவம் உள்ளது⋆ தான் குறிக்கொள் வகை செய்ததுவும்⋆
சத்துவ நற்கிரிசைப் பயனும்⋆ சரணாகதியும்⋆
சத்துவமே தருவான் உரைத்தான்⋆ தனிப் பார்த்தனுக்கே (19)

‡வன் பற்றறுக்கும் மருந்தென்று⋆ மாயவன் தான் உரைத்த⋆
இன்பக்கடல் அமுதாம் என நின்ற⋆ இக்கீதை தன்னை⋆
அன்பர்க்குரைப்பவர்⋆ கேட்பவர் ஆதரித்தோதும் அவர்⋆
துன்பக் கடலுல் துளங்குகை நீங்கித்⋆ துலங்குவரே (20)

‡தீதற்ற நற்குணப் பாற்கடல்⋆ தாமரைச் செம் மலர்மேல்⋆
மாதுற்ற மாயன் மருவ⋆ இன் கீதையின் வண் பொருளைக்⋆
கோதற்ற நான்மறை மௌலியின்⋆ ஆசிரியன் குறித்தான்⋆
காதல் துணிவுடையார்⋆ கற்கும் வண்ணம் கருத்துடனே (21)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com